# பேதுரு எழுதிய இரண்டாம் நிருபம்

**ஆசிரியர்:**

அப்போஸ்தலனாகிய பேதுருவே இந்த நிருபத்தை எழுதினார். பேதுருவின் இரண்டாம் நிருபம் அதை எழுதியவரின் பெயரால் அழைக்கப்படுகிறது. சீமோன் பேதுரு வேதாகமத்தில் நன்று அறியப்பட்ட மனிதராக இருக்கிறார்; என்பதோடு இவர் சபையில் அப்போஸ்தலராகவும், மூப்பராகவும் இருந்தார். (மத் 10:2; 1 பேது 5:1).

**எழுதப்பட்ட காலம்**

பேதுருவின் முதாலம் நிருபம் கி.பி 64 யில் நீரோ என்கிற ரோம ராஜா கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தத் தொடங்கிய பின்பு எழுதப்பட்டது, பேதுரு கி.பி 65-67ம் ஆண்டுக்குள் மரித்தார் என்றால் இந்த இரண்டாம் நிருபம் முதலாம் நிருபம் எழுதப்பட்ட பின்பு சற்று காலத்திலேயே எழுதப்பட்டிருக்கலாம். ஏறக்குறைய பேதுருவின் வாழ்க்கையின் முடிவுக்கு முன்பு இந்த நிருபம் எழுதப்பட்டிருக்கலாம் (2 பேதுரு 1:14)

**நோக்கம் மற்றும் மைய கருத்து:**

பேதுரு இந்த இரண்டாம் நிருபத்தில் **“பிரியமானவர்களே, இந்த இரண்டாம் நிருபத்தை இப்பொழுது உங்களுக்கு எழுதுகிறேன். பரிசுத்த தீர்க்கதரிசிகளால் முன்சொல்லப்பட்ட வார்த்தைகளையும், இரட்சகராயிருக்கிற கர்த்தருடைய அப்போஸ்தலராகிய எங்களுடைய கட்டளைகளையும் நீங்கள் நினைவுகூரும்படி இந்த நிருபங்களினால் உங்கள் உண்மையான மனதை நினைப்பூட்டி எழுப்புகிறேன்”** 2 பேதுரு 3:1,2. ஆகவே நம்முடைய மனதை நினைப்பூட்டி எழுப்பவே பேதுரு இந்த நிருபத்தை எழுதிகிறார்.

கிறிஸ்தவருடைய மனதை ஏன் எழுப்பி விட வேண்டும்? கிறிஸ்தவரை எழுப்பிவிட வேண்டுமென்றால் அவர் உறங்கி/தூக்கம் கொண்டு இருக்கிறார் என்று அர்த்தமா? ஆம் ஒரு கிறிஸ்தவர் மனதில் தூங்கி கொண்டு இருக்க முடியும். இயேசு சொன்ன வார்த்தைகளை நாம் கவனிக்கும் போது **“உங்கள் ஆண்டவர் இன்ன நாழிகையிலே வருவாரென்று நீங்கள் அறியாதிருக்கிறபடியினால் விழித்திருங்கள்”** மத் 24:42. கிறிஸ்தவர்களாகிய நாம் இயேசு கிறிஸ்து வருவதற்கும், பரலோகத்திற்கும் காத்துக்கொண்டு இருக்கிறோம் என பேதுரு கூறுகின்றார் (2 பேது 3:13,14). இப்படிபட்ட சூழ்நிலையில் தெளிந்த புத்தியுடனும், விழித்திருக்க வேண்டிய கிறிஸ்தவர் (1 பேதுரு 1:13, 1பேதுரு 4:7; 1 பேது 5:8). கள்ள போதகர்களினாலும், (2 பேது 2), பாவ இச்சையினாலும் (2 பேது 2:20-21), அக்கிரமக்காரருடைய வஞ்சகத்தினாலும் (2 பேது 3:17), ஏமாற்றப்பட முடியும் . இந்த நிலையில் தான் ஒரு கிறிஸ்தவர் பிசாசின் தந்திரங்களினால் மனதில் தூங்கி கொண்டு அல்லது மயக்கம் அடைந்து அல்லது வசியப்பட்ட நிலையில் இருக்க கூடாது என்பதற்காகவே பேதுரு நம்முடைய உண்மையான மனதை எழுப்பி விட இந்த நிருபத்தை எழுதிகிறார்.

“ஆகிலும், சர்ப்பமானது தன்னுடைய தந்திரத்தினாலே ஏவாளை வஞ்சித்ததுபோல, **“உங்கள் மனதும் கிறிஸ்துவைப்பற்றிய உண்மையினின்று விலகும்படி கெடுக்கப்படுமோவென்று பயந்திருக்கிறேன்” –** 2கொரி 11:3.

“பரிசுத்த தீர்க்கதரிசிகளால் முன்சொல்லப்பட்ட வார்த்தைகளையும், இரட்சகராயிருக்கிற கர்த்தருடைய அப்போஸ்தலராகிய எங்களுடைய கட்டளைகளையும் நீங்கள் நினைவுகூரும்படி இந்த நிருபங்களினால் **உங்கள் உண்மையான மனதை நினைப்பூட்டி எழுப்புகிறேன்” –** 2 பேது 3:2

“உங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள்” 2 பேது 1:10

அறிவு என்பது இந்த நிருபத்தின் திறவுக்கோள் வார்த்தையாக இருக்கிறது. அறிவு, அறிய, அறிகிற, அறிந்த போன்ற வார்த்தைகள் இந்த நிருபத்தில் ஏறக்குறைய 14 முறை வருகிறது. முதல் அதிகாரத்தில் மாத்திரம் இந்த வார்த்தை 8 முறை வருகிறது.

கிறிஸ்தவர் ஒருவர் கர்த்தருக்கு விசுவாசமாக நிலைத்திருக்க வேண்டுமென்றால்; அவர் பொய்யிலிருந்து சத்தியத்தை பிரித்துணரக்கூடியவராக இருக்க வேண்டும். தேவன் நம்மை சிந்திக்க கூடிய, பகுத்தறிய

கூடியவர்களாகவே படைத்திருக்கிறார். (யோபு 32:8; நீதி 20:27). தேவன் மீது நாம் வைத்திருக்கும் நம்பிக்கை,விசுவாசம் என்பவைகள் ஏதோ கண்மூடிதனமாக இருக்க வேண்டும் என தேவன் எதிர் பார்க்க வில்லை, மாறாக நாம் தேவனை அறிகிற அறிவில் வளர வேண்டும் என தேவன் எதிர்பார்க்கிறார் (2 பேது 1:2,8; ) **"நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள்" – 2பேது 3:18**. வளருதல் என்பதே முக்கியமாக இருக்கிறது. புதிதாக மனம் மாறியவர்கள், விசுவாசத்தில் பக்குவம் அடைந்தவர்கள் மற்றும் இவ்விரண்டிற்கும் இடைப்பட்ட நிலையில் உள்ளவர்கள் என்ற எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் பொதுவாக இருக்க கூடியது ஆவிக்குரிய வளர்ச்சியாகும். நாம் தேவனுக்கு செய்யும் எல்லா காரியங்களையும் ஏன் செய்கிறோம் என்கிற உணர்வுடையவர்களாய் செய்ய வேண்டும். நாம் தேவனின் மீது விசுவாசமுடையவர்களாய் இருப்பதோடு அவரை பற்றிய அறிவிலும் நாம் வளர வேண்டும் (2 பேது 1:12). தேவனுடைய வார்த்தை மனிதனை சிந்திக்க வைக்க கூடியதாக இருக்கிறது (அப் 8:32-35; அப் 17:11), நம்முடை உணர்ச்சிகள் மற்றும் நம்முடைய விருப்பம் எல்லாத்தை விட தேவனுடைய வார்த்தையினால் கிடைக்கும் அறிவே நம்மை வழி நடத்த வேண்டும், கிறிஸ்துவுக்குள் நிலைத்திருக்க செய்ய வேண்டும். (சங் 119:104,105).

**அதிகாரம் 1:**

1. கிறிஸ்தவர்களாகிய நமக்கு மாபெரும் வாக்குத்தத்தங்களும், உத்தரவாதமும் இருக்கிறது என்பதே அறிந்துக்கொள்ளுங்கள். (1:1-21)
    1. இயேசுகிறிஸ்துவின் நீதியால் அருமையான விசுவாசம் நமக்கு இருக்கிறது, ( வ 1)
    2. நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினால் நமக்கு என்னவெல்லாம் கிடைத்திருக்கிறது?.(வ 2-4)
    3. நாம் இடறிவிழுந்து இந்த ஆசிர்வாதங்களை இழந்துப்போகாமல் இருக்க என்னவெல்லாம் செய்ய வேண்டும் ?(வ 5-11)
    4. பேதுருவின் தற்போதையா நிலைமையும், இந்த நிருபத்தை எழுதுவதற்கான காரணமும் (வ 12-15)
    5. நம்முடைய விசுவாசமானது கட்டுக்கதைகளை அடிப்படையாக கொண்டது அல்ல, தேவ வசனத்தினால் உறுதியானது (வ 16 -21)

**அதிகாரம் 2**

1. கள்ளத்தீர்க்கதரிசிகளையும், கள்ளப்போதகர்களையும் குறித்து எச்சரிப்பு (2:1-22)
    1) கள்ளப்போதகர்களும், கள்ளத்தீர்க்க தரிசிகளும் உங்களுக்குள் இருப்பார்கள் (2:1)
    2) இவர்களின் தவறான செயல்களும், இவர்களின் அழிவும் (2:2-10)
    3) இவர்கள் எப்படிப்பட்டவர்களாய் இருக்கிறார்கள்? (2:11-19)
    4) கிறிஸ்துவை விட்டு பின்வாங்குபவரின் நிலை எப்படிப்பட்டதாய் இருக்கும் (2:20-22)

**அதிகாரம் 3**

1. இயேசு மீண்டும் வர பொறுமையுடனே, காத்திருங்கள் (3:1-18)
    1) கடைசி காலத்தில் சுய இச்சைகளின் படி நடக்கிற பரியாசக்காரர் வந்து, நம்மை விசுவாசத்தை விட்டு விலக்க முயற்சி செய்வார்கள் (3:1-6)
    2) ஏன் கர்த்தர் வர தாமதிக்கிறது ?(3:7-13)
    3) அவர் வர தாமதிக்கிறதினால் நாம் என்ன செய்ய வேண்டும்? (3:14-18)

ஆதலால் பிரியமானவர்களே, இவைகளை முன்னமே நீங்கள் அறிந்திருக்கிறபடியால், அக்கிரமக்காரருடைய வஞ்சகத்திலே **நீங்கள் இழுப்புண்டு உங்கள் உறுதியிலிருந்து விலகி விழுந்துபோகாதபடிக்கு எச்சரிக்கையாயிருந்து, 1 பேது 3:17**

**இரா. ஜோஸ்**